எஸ்.டி.சி. 188/2023
அ.சா. 1 உமாமகேஸ்வரன்
த/பெ.கிருஷ்ணன்
19.03.2024

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். கு.வி.மு.ச. பிரிவு 311–ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை.

1. எனது ஓனர் பெயர் தர்மராஜ் ஆகும். எனது ஓனரும் நானும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். நான் மேலாளராக வேலை பார்த்த விபரத்தை புகார் மனுவிலும், முதல் விாரணையிலும் சொல்லவில்லை. ஓனரிடம் சாட்சி அகதீஸ்வரன், சாட்சி ராமச்சந்திரன், சாட்சி மருதுபாண்டின், சாட்சி சத்தியேந்திரன் வேலை செய்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பு நான்கு நபர்களும் நல்ல பழக்கம் என்றால் சரிதான். நெருங்கி நண்பர் என்பதால் நான் வழக்கில் அக்கறையுள்ள சாட்சி என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக பொதுமக்கள் இருந்ததாகவோ, பார்த்தாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். குவாரியில் 10 அடிக்குள் குழி தோண்டுவோம். குவாரி மீது எதிரி விஏஓ, தாசில்தாரிடம் புகார் அளித்த விபரம் தெரியுமா என்றால் புகாரே அளிக்கவில்லை. 16.04.2023ம் தேதியன்று எதிரி மிரட்டி சென்ற அன்று விஏஓ, தாசில்தார் குவாரிக்கு வரவில்லை. குவாரிக்கு அருகில் எதிரியின் தோட்டம் உள்ளது. எதிரியின் தோட்டத்திற்கு அருகே நாங்கள் குழி தோண்டவில்லை. குழி தோண்டும் இடத்தில் கால்வாய், ஓடை, விவசாய நிலம் இல்லை. குவாரிக்கு அருகில் ஊரணி 5 உள்ளது என்றால் சரிதான். குவாரி, பொது ஊரணி அருகே மின் கம்பி போட்டு வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. குவாரி, ஊரணி, கால்வாய் ஆகியவற்றின் சர்வே எண் எனக்கு தெரியாது.

2. ஊரணியா, பட்டா இடமா என்று ஆவணங்களை பார்த்தால் தெரியும். சம்பவ இடத்தை சுற்றி ஆவரங்குளம், செங்குளம் போன்ற ஊர்கள் உள்ளன. மேற்படி ஊர்களின் தோட்டமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி தோட்டத்தில் ஊர்க்காரர்கள் வேலை செய்வார்கள் என்றால் சரிதான். போலிசார் விசாரணையிலும் புகார் மனுவிலும் குவாரியை சுற்றி ஆட்கள் வேலை பார்க்கிறார்கள் என்று சொல்லி உள்ளேன் . மேற்படி வேலை பார்ப்பவர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால்

இருந்தவர்களை சொல்லி உள்ளோம். குவாரியில் மொத்தம் 4 நபர்கள் வேலை பார்ப்போம். அதில் சாட்சி 5 மேலாளர் என்றால் சரிதான். குவாரியின் அருகில் முக்குளம் 8 கிமீ துூரம் இருக்கும். ஓனர் எங்கிருந்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியும். பிரச்சனைக்கு முன்பு , பின்பு ஓனர் குவாரிக்கு வந்துள்ளார். மேற்படி இரு தேதிகளிலும் ஓனர் குவாரியில் சம்பவ இடத்தில் இல்லை. சம்பவ விபரத்தை எனது ஓனரிடம் தகவல் சொன்னோம். அது சம்பந்தமாக நானோ, ஓனரோ எந்த புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 23.04.2023ம் தேதி எதிரி மிரட்டியது சம்பந்தமாக அன்றைய தேதியில் நானும் எனது ஓனரும் புகார் கொடுக்கவில்லை. எனது ஓனரை விசாரித்தால் இவ்வழக்கின் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி இரு தேதிகளிலும் நடந்த விபரத்தை ஓனரிடம் சொல்லிவிட்டோம் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். ஆனால் இவ்வழக்கில் எனதுஓனரை சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் .

3. எதிரி பொது இடத்தில் ஆபாசமாக பேசியதால் மன உளைச்சல் ஏற்பட்டதாக புகாரில் சொல்லி உள்ளேன். எதிரி மேற்படி இரு தேதிகளிலும் பிரச்சனை செய்தபோது சண்டையை விலக்கிவிட்டதாக எந்த ஒரு நபர்களின் பெயரையும் புகாரிலும், போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். கண்ணுற்ற சாட்சிகளாக எனக்கு தெரிந்த நபர்கள் இருந்திருந்தால் அவர்களை வழக்கில் போலிசார் சேர்த்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரி என்னை ஆபாசமாக பேசிய பின்பு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். எதிரி அவரது ஊருக்கு சென்றுவிட்டாரா என்றால் எங்கு சென்றார் என்று எனக்கு தெரியாது. எதிரி குவாரியின் மீது சட்டத்திற்கு புறம்பாக இயற்கைகனிமவளத்தை திருடுவதாக புகார் கொடுத்ததன் அடிப்படையில் எதிரியின் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எனது ஓனரிடம் சம்பவத்திற்கு முன்பு கூலி வேலை செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி குவாரிக்கு அருகில் விவசாய வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது.

4.எதிரி சாதாரண விவசாயி என்றாலும் எனது குவாரி மீது புகார் கொடுத்ததால் பொய்யாக வழக்கு கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

5.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.